



**அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை**

| | |
|---|---|
| **வெளியிடு** | **ஐக்கிய அரபு அமீரக அரசின்**<br>**இஸ்லாமிய விவகார துறை**<br>(http://www.awqaf.gov.ae) |

| |
|---|
| **வெள்ளிக்கிழமை ரமளான் பிறை 26 ஹிஜ்ரி 1437**<br>Friday of Ramadan 26th Hijri 1437<br>1st July 2016 |

| | |
|---|---|
| **தலைப்பு:** | **புனித லைலத்துல் கத்ர் !** |



| | |
|---|---|
| **தமிழில்** | **மௌலவி, அப்சலுல் உலமா**<br>**புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.**<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |



*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | புனித லைலத்துல் கத்ர் ! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன்தான் அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து தகுந்த முறையில் பக்குவப்படுத்துகிறான். நமக்காக அவன் லைலத்துல் கத்ர் இரவை தந்துள்ளான். அந்த இரவில் நமக்கு அதிகமான நன்மைகளை வழங்குகிறான்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(68:34)

إِنَّ لِلْمُتَّقِينَ عِنْدَ رَبِّهِمْ جَنَّاتِ النَّعِيمِ

“நிச்சயமாக, இறை அச்சமுடையவர்களுக்கு, தங்கள் இறைவனிடத்தில் மிக்க இன்பம் தரும் சுவனபதிகளும் உண்டு”

**தொழுகையாளிகளே**! இந்த புனித ரமளான் மாதத்தில் தற்போது நாம் புனித நாட்களில் இருந்து கொண்டு இருக்கிறோம். இந்த நாட்களில் இறைவனின் மன்னிப்பை பெறுகிறோம். இந்த நாட்களில்தான் புனித லைலத்துல் கத்ர் இரவு இருக்கிறது. இந்த இரவு ஆயிரம் மாதங்களைவிட சிறந்ததாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த இரவை கண்ணியப்படுத்தி கூறுகிறான்: (97:1-3)

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةِ الْقَدْرِ * وَمَا أَدْرَاكَ مَا لَيْلَةُ الْقَدْرِ * لَيْلَةُ الْقَدْرِ خَيْرٌ مِنْ أَلْفِ شَهْرٍ

“நிச்சயமாக நாம் இந்தக் குர்ஆனை (மிக்க கண்ணியமுள்ள) லைலத்துல் கத்ர் என்னும் ஓர் இரவில் (முதலாவதாக) இறக்கி வைத்தோம். (நபியே!) அந்தக் கண்ணியமுள்ள இரவின் மகிமையை நீங்கள் அறிவீர்களா? கண்ணியமுள்ள அந்த இரவு ஆயிரம் மாதங்களைவிட மிக்க மேலானதாகும்”



www.sunnathwaljamath.com

நிச்சயமாக இந்த இரவு மேன்மையும், கண்ணியமும் நிறைந்த இரவாகும். இந்த இரவில் நின்று வணங்குவதும், நற்செயல்களில் ஈடுபடுவதும் ஆயிரம் மாதங்களை விட சிறப்பிற்குரியதாகும். ( تفسير الطبري : (545/24)

அதாவது எண்பத்திமூன்று வருடங்கள் செய்யும் நற்செயல்களை விட மேலானதாகும். புனிதம் மிக்க வேதம் அல்குர்ஆனை இறக்கி வைப்பதற்கு அல்லாஹ் இந்த இரவைத்தான் தேர்ந்தெடுத்துள்ளான். இதனைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான்: (44:3-4)

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةٍ مُبَارَكَةٍ إِنَّا كُنَّا مُنْذِرِينَ* فِيهَا يُفْرَقُ كُلُّ أَمْرٍ حَكِيمٍ

“நிச்சயமாக இதனை மிக்க பாக்கியமுள்ள ("லைலத்துல் கத்ரு" என்ற) ஓர் இரவில் (முதல் முறையாக) இறக்கி வைத்து, நிச்சயமாக நாம் (இதன் மூலம்) அச்சமூட்டி எச்சரிக்கை செய்கின்றோம். உறுதியான எல்லா காரியங்களும் அதில்தான் நம்முடைய கட்டளையின்படி (நிர்மாணிக்கப்பட்டு) பிரித்துக் கொடுக்கப்படுகின்றன”

இந்த இரவின் மகத்துவத்தை இறைவன் பன்மடங்கு உயர்த்தி வைத்துள்ளான். இந்த இரவில் அடியார்கள் செய்யும் வணக்கங்கள் மற்றும் நற்செயல்களுக்கு எண்ணிலடங்காத கூலியை வழங்குகிறான். ((277/25) :التحرير والتنوير)

“இந்த இரவில்தான் ஒவ்வொன்றிற்குமான நிர்ணயத்தை இறைவன் ஏற்படுத்துகிறான். ஒவ்வொரு படைப்புகளுக்கும் அடுத்த ஆண்டுவரைக்கும் நடக்க இருக்கும் விதியை நிர்ணயிக்கிறான். அந்த படைப்புகளுக்கு கிடைக்க இருக்கும் வளங்கள், மற்றும் அவைகளின் செயல்பாடுகள் அனைத்தையும் இந்த இரவிலே இறைவன் விதியில் பதிவு செய்கிறான்” என்று இமாம் ஹஸன் அல்பஸரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள்.

“ஒரு வருடத்தில் நடக்க இருக்கும் பிறப்புகள், இறப்புகள், செல்வ வளர்ச்சி மற்றும் வீழ்ச்சி, மழை பொழிவின் அளவு போன்ற அனைத்தையும் இந்த இரவில்தான் இறைவன் விதியில் பதிவு செய்கிறான்” என்று ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள். ((71/19) : تفسير القرطبي)

இந்த இரவிற்கு லைலத்துல் கத்ர் (மகத்துவம் நிறைந்த) இரவு என்று அழைக்கப்படுகிறது. காரணம் அல்லாஹ் தஆலா இந்த இரவில்தான் மகத்துவம் நிறைந்த வேதத்தை, மகத்துவம் நிறைந்த தூதர் மீது, மகத்துவம் நிறைந்த உம்மத்திற்காக இறக்கி அருளியுள்ளான். ((131/20) : تفسير القرطبي)

இந்த இரவிலே விண்ணைச் சார்ந்தவர்கள் மண்ணில் உள்ளவர்களோடு சேர்ந்து கொள்கிறார்கள். தொடர்ந்து நன்மைகளும் நற்பாக்கியங்களும் இந்த இரவில் இறங்கிக்கொண்டே இருக்கின்றன. எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (97:4)

تَنَزَّلُ الْمَلَائِكَةُ وَالرُّوحُ فِيهَا بِإِذْنِ رَبِّهِمْ مِنْ كُلِّ أَمْرٍ



www.sunnathwaljamath.com

“அதில் மலக்குகளும், ஜிப்ரயீலும், தங்கள் இறைவனின் கட்டளையின் பேரில் (நடைபெற வேண்டிய) எல்லா காரியங்களுடன் இறங்குகின்றனர்”

அதாவது இந்த புனித இரவில் ஒவ்வொரு வானத்திலிருந்தும், ஸித்ரத்துல் முன்தஹாவிலிருந்தும் மலக்குமார்கள் இறங்கி பூமியை நோக்கி வருகிறார்கள். மனிதர்கள் செய்யும் துஆக்களுக்கு ஆமீன் சொல்கிறார்கள். காலை பஜ்ர் நேரம் வரும் வரை அனைத்து மலக்குமார்களும் இப்படியே செய்து கொண்டே இருப்பார்கள். ((133/20) : تفسير القرطبي)

மலக்குமார்கள் இறங்கி வரும்போது அவர்களோடு சேர்ந்து இறையருளும் நற்பாக்கியங்களும் இறங்கிக் கொண்டே இருக்கும். ((444/8) : تفسير ابن كثير)

நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

وَإِنَّ الْمَلَائِكَةَ تِلْكَ اللَّيْلَةَ أَكْثَرُ فِي الأَرْضِ مِنْ عَدَدِ الْحَصَى

“(பூமியில் உள்ள) மணல் துகள்களின் எண்ணிக்கையை விட இந்த புனித இரவில் (இறங்கி வரும்) மலக்குமார்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும்” (332/3 صحيح ابن خزيمة)

இந்த மலக்குமார்கள் முஃமீன்களை நோக்கி ஸலாம் சொல்வார்கள். இந்த இரவு மிகவும் நிம்மதி தரக்கூடிய இரவாகும். அதிக நன்மையையும், பாதுகாப்பும், அமைதியும் நிறைந்த இரவாகும். எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த இரவின் தன்மையை பின்வருமாறு கூறுகிறான்: (97:5)

سَلَامٌ هِيَ حَتَّى مَطْلَعِ الْفَجْرِ

“ஈடேற்றம் உண்டாகுக! (அவ்விரவின் இச்சிறப்பு) விடியற்காலை உதயமாகும் வரை (நீடிக்கிறது)”

**தொழுகையாளிகளே**! புனித லைலதுல் கத்ர் இரவு நற்பாக்கியம் நிறைந்த இரவாகும். மக்ரிப் தொழுகைக்கு பாங்கு சொன்னது முதல் இந்த இரவு தொடங்குகிறது. காலை பஜ்ர் தொழுகைக்கு பாங்கு சொல்லும்வரை நீடிக்கிறது. இந்த இரவின் கண்ணியத்தை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பல்வேறு வகையான வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு பயனுள்ள வகையில் இந்த இரவை கழித்தார்கள். இரவின் ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் நன்மையை பெற்று விடவேண்டும் என்கிற ஆவலோடு செயல்படுவார்கள்.

தன்னுடைய சஹாபா பெருமக்களையும் இவ்வாறே ஆர்வத்தோடு அமல் செய்ய வேண்டும் என்று தூண்டிக்கொண்டே இருப்பார்கள். இந்த இரவில் வணக்கம் புரிவதின் முக்கியத்துவத்தை பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்கள்:

مَنْ قَامَ لَيْلَةَ الْقَدْرِ إِيمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ

“லைலத்துல் கத்ரில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நின்று வணங்குகிறவரின், முன்னர் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்!” (متفق عليه)

இந்த இரவில் அதிகமான துஆக்களை செய்து கொண்டே இருப்பார்கள். இறைவனிடம் மிகவும் பணிவாகவும், உள்ளச்சத்தோடும் நெருங்கி வருவார்கள். அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள், “அல்லாஹ்வின் தூதரே! நான் இந்த இரவை அடைந்து கொண்டால் என்ன துஆ ஓத வேண்டும்?” என்று கேட்டார்கள். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:

تَقُولِينَ: اللَّهُمَّ إِنَّكَ عَفُوٌّ تُحِبُّ الْعَفْوَ، فَاعْفُ عَنِّي

“யா அல்லாஹ் நிச்சயமாக நீ மன்னிக்கக்கூடியவன், மன்னிப்பையே விரும்புபவன். எனவே என்னை நீ மன்னித்து விடுவாயாக!” என்று நீ ஓத வேண்டும்” என்று கூறினார்கள். ( أحمد : 25495, والترمذي: 3513, وابن ماجه: 3840)

இந்த நற்பாக்கியம் நிறைந்த இரவில் ஓர் அடியான் செய்யும் துஆக்களில் இந்த துஆ மிகவும் ஏற்றமான மற்றும் மகத்துவம் நிறைந்த துஆவாகும். இவ்விடத்தில் அல்அப்வு(**الْعَفْو**) என்கிற அரபி பதம் இடம்பெறுகிறது. அதாவது, தீமையானவற்றை நீக்கிவிடுதல், தண்டனைகளை இல்லாமல் செய்துவிடல் என்கிற பொருள் இருக்கிறது. அல்லாஹ் தஆலா மன்னிக்கும் தன்மையுள்ளவன் மேலும் அனைத்தின் மீதும் ஆற்றல் வாய்ந்தவன். அதாவது ஏற்கனவே விதியில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பாவங்களையும், தீமைகளையும், குற்றங்களையும், அழித்துவிடுகிறான். இதனால் ஒரு மனிதனின் எதிர்கால பாதை தூய்மையடைந்து விடுகிறது. இதுவே மன்னிக்கும் குணத்தின் பரிபூரண தன்மையாகும்.

**தொழுகையாளிகளே! நாம் எவ்வாறு இந்த புனித இரவை நல்ல விதத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்?** இத்தகைய சிறப்பு வாய்ந்த ஓர் இரவு கிடைக்கப் பெறுவது ஒரு முஸ்லிம் பெற்ற உன்னத பாக்கியமாகும். இதன் நன்மைகளை நிச்சயம் அவன் தவற விடக்கூடாது. எனவே ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் நல்ல அமல்களில் ஈடுபட வேண்டும். இவ்வாறு செய்வதால் ரமளான் மாதத்தை உரிய முறையில் கண்ணியப்படுத்திய அடியானாக இருக்க முடியும்.

ஒரு மனிதன் தனது ஆற்றலை நல்ல அமல்களை செய்வதற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தனது செயல்பாடுகள் மூலம் நன்மையானவற்றை மட்டுமே தன்னுடைய இறைவனிடம் எடுத்துக் காட்ட வேண்டும். வணக்க வழிபாடுகளில் அதிக ஆர்வத்தோடு ஈடுபட வேண்டும். பரிசுத்த நாயனாகிய இறைவனை திக்ர் செய்து கொண்டே இருக்க வேண்டும். அவனுக்கு நன்றி கூறும் விதமாக அவனை புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். அதிக தானதர்மங்களை செய்ய வேண்டும். திருக்குர்ஆனை மிகவும் நேர்த்தியாக நிதானமாக ஓத வேண்டும். ஐவேளை தொழுகையையும் ஜமாத்தோடு நிறைவேற்ற வேண்டும்.

தாபியீன்களில் மிகவும் பிரபலமான ஸயீத் இப்னு முஸய்யிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள், “புனித லைலத்துல் கத்ர் இரவு அன்று யார் இஷா தொழுகையை ஜமாஅத்தோடு நிறைவேற்றுகிறாரோ நிச்சயம் அவர் இந்த இரவின் பயனை அடைந்து கொள்ளும் வாய்ப்பை பெறுகிறார்” (الموطأ : 897)

அதனைத் தொடர்ந்து தராவீஹ் தொழ வேண்டும். இமாம் தொழுகையை நிறைவு செய்யும் வரை இமாமோடு நின்று தொழுதால் இரவு முழுவதும் நின்று வணங்கிய பாக்கியத்தை பெறமுடியும். இந்த புனித லைலதுல் கத்ர் இரவின் நன்மையை அதிகமாக பெற வேண்டும் என்றால் பஜ்ர் நேரம் தொடங்குவதற்கு சற்று முன்னர் வரை இறைவனுக்கு முன்னால் மன்றாடி துஆச் செய்து கொண்டிருக்க வேண்டும். அந்த நேரத்தில் தொழுகையிலும் ஈடுபட வேண்டும். மிகவும் பணிவாக உள்ளச்சத்தோடு இருக்க வேண்டும்.

இந்த நேரத்தில் லைலத்துல் கத்ர் இரவின் சிறப்பையும், சஹர் நேரத்தின் சிறப்பையும் ஒரு சேர பெறக்கூடிய வாய்ப்பு கிடைக்கும். இந்த நேரத்தில் மன்றாடி துஆச் செய்யும் ஓர் அடியானின் துஆவை பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் ஏற்றுக் கொள்கிறான் என்று தனது வேதத்தில் உறுதியளித்திருக்கிறான். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (40:60)

ادْعُونِي أَسْتَجِبْ لَكُمْ

"நீங்கள் (உங்களுக்கு வேண்டியவை அனைத்தையும்) என்னிடமே கேளுங்கள். நான் உங்களுடைய பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொள்வேன்"

யா அல்லாஹ் லைலத்துல் கத்ர் இரவின் பாக்கியத்தை நாங்கள் முழுமையாக பெறுவதற்கு எங்களுக்கு நீ கிருபை செய்வாயாக! இந்த இரவில் நன்மையை பெற்ற அடியார்களாக எங்களை நீ ஆக்கி வைப்பாயாக!! எங்களுடைய தொழுகை, நோன்பு, நல்ல அமல்கள் அனைத்தையும் உனது கருணையினால் ஏற்றுக் கொள்வாயாக!!!

**கவனமாக கேளுங்கள்! அல்லாஹ்வின் அடியார்களே!** நாம் அனைவரும் அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடக்க வேண்டும் என்று எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கு கீழ்படிந்து நடக்க வேண்டும், அவனுடைய திருப்பொருத்தத்தை பெறுவதற்கு ஆர்வம் கொள்ள வேண்டும், இந்த நாட்களில் அதிகமான வணக்க வழிபாடுகளில் ஈடுபட வேண்டும், தான தர்மங்களை செய்ய வேண்டும். மிகக் குறிப்பாக பித்ரா ஸதகாவை வழங்க வேண்டும்.

அன்றைய நாள் முழுவதிற்கும் தேவையான உணவு இருக்கும் முஸ்லிமான ஆண் மற்றும் முஸ்லிமான பெண் பெருநாள் பித்ரா கொடுக்க வேண்டும் என்கிற வழிமுறையை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு காட்டித்தந்துள்ளார்கள். குடும்ப தலைமை பொறுப்பில் இருக்கும் ஒரு முஸ்லிமான ஆண், யாருக்கெல்லாம் செலவு செய்வது கடமையோ அவர்கள் சார்பாக இவரே பெருநாள் பித்ரா கொடுக்க வேண்டும். அதாவது ஒரு தந்தை தன்னுடைய பிள்ளைகள் சார்பாகவும் கொடுக்க வேண்டும்.

"பித்ரா ஜகாத்தை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடமையாக்கியுள்ளார்கள். இதனால் ஒரு நோன்பாளி அவர் நோன்பு காலத்தில் செய்த வீணான செயல்கள், பேசிய அருவருப்பான வார்த்தைகளை விட்டு தூய்மையடைகிறார். மேலும் இதனால் உணவற்ற ஏழைகளுக்கு உணவு கிடைக்கிறது. பெருநாள் தொழுகையை தொழுவதற்கு முன்னரே யார் பித்ரா ஜகாத்தை வழங்கி விடுகிறாரோ நிச்சயம் இவருடைய

தர்மம் பித்ரா ஜகாத்தாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் பெருநாள் தொழுகையை முடித்த பிறகு இந்த தர்மத்தை செய்தால் அவர் வழமையான ஒரு தர்மத்தை செய்த நன்மையை மட்டுமே பெறுவார். பித்ரா ஜகாத்தை நிறைவேற்றியவராக மாட்டார்" என்று ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் விளக்கம் அளித்துள்ளார்கள். ( أبو داود : 1609, وابن ماجه 1827 :)

**இந்த ஜகாத் பித்ராவின் அளவு: பொதுவாக அமீரக மக்கள் வெகுவாக பயன்படுத்தும் உணவு தானியத்திலிருந்து இரண்டு கிலோகிராம் அல்லது அதன் பண மதிப்பாகிய இருபது திர்ஹம்கள் ஆகும். பெருநாள் தொழுகைக்கு செல்வதற்கு முன்னரே இதனை வழங்கிவிட வேண்டும்.**

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

"ஈமான்கொண்ட நல்லடியார்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்"

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!



www.sunnathwaljamath.com

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).